Uploaded on 29.07.2026



| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதி அறிக்கை தாக்கல்** | : | 22.01.2026 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 29.07.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 29.01.2026 | **விசாரணை காலம்** | : | 6 மாதங்கள் 1 நாள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.

**2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 29–ம் தேதி புதன்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 51/2026**

## CNR No. TNSA1800-000257-2026

அரசுக்காக காவல் ஆய்வாளர், மேட்டூர் காவல் நிலையம்
**Cr. No. 513 of 2025 u/s 281, 106(1) of BNS, 185 MV Act** **...புகார்தாரர்**

**–எதிர்–**

**சந்தோஷ் (26/2025) த/பெ.பழனிவேலு, நெ.2/36, அங்கப்பன் காட்டு வளவு, வீரக்கல், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.** **..எதிரி**

**<u>வழக்கு விசாரணை விவரங்கள்</u>**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கில் எதிரி கடந்த 05.11.2025ம் தேதியன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார். |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 22.01.2026 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 11.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | இல்லை | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 செல்வி | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.2 | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.3 | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.4 | 24.03.2026 | 24.03.2026 |
| | | | அ.சா.5 | 27.05.2026 | 27.05.2026 |
| | | | அ.சா.6 அம்சவல்லி | 22.07.2026 | 22.07.2026 |
| | | | அ.சா.7 | 27.07.2026 | -- |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 351(1)(ஆ)–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 27.07.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | பொருந்தாது | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய | : | இல்லை | | |

| | | | |
|---|---|---|---|
| | இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | | |

இந்நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள இந்த ஆண்டு பட்டிகை வழக்கானது, அரசுத் தரப்பிற்காக ஆஜரான **கற்றறிந்த உதவி அரசுதரப்பு வழக்கறிஞர் திருமதி.V. அனுராதா** அவர்களது வாதங்களையும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பிற்காக ஆஜரான **வழக்கறிஞர் திரு.V.P.மகேந்திரபிரபு** அவர்களது வாதங்களையும் கேட்பதற்காக 29.07.2026ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, கோப்பில் உள்ள அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து, இன்று வரை பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளிக்கிறது:

**தீர்ப்பு**

இந்த வழக்கானது **மேட்டூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர்** அவர்களால், குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் **சி.சி. எண். 51 / 2026** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டதாகும். மேற்படி இந்த வழக்கில் **குற்ற எண். 513/2025–ன் படி,** மேட்டூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட, பூலாம்பட்டியில் இருந்து மேட்டூர் செல்லும் சாலையில், கோல்நாயக்கன்பட்டி, மணி காடு கோபாலன் மாட்டு கொட்டாய் அருகே, கடந்த 12.10.2025–ஆம் தேதி இரவு 11.45 மணியளவில், இந்த வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான சந்தோஷ் என்பவர் மது போதையில் இருந்தபடி, TN.93.D.1152 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் இறந்து போன செல்லதுரை என்பவரைப் பின்னால் உட்கார வைத்துக்கொண்டு, மேட்டூர் நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிச்

சென்று, மேற்படி மாட்டுக்கொட்டகை சுவற்றின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, அந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் காரணமாக மேற்படி செல்லதுரை என்பவர் இறந்து போகக் காரணமாக இருந்து, **பாரத நீதிச்சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 106(1)** ஆகியவற்றின் கீழும், **மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185–ன்** கீழும் தண்டனைக்குரிய குற்றச் செயல்களைச் செய்துள்ளதாகக் கூறி, இந்த வழக்கில் இறுதி அறிக்கை கடந்த **22.01.2026–ஆம்** தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குற்றச்சாட்டுகளை புலன்கொள்ளல்**

1. கடந்த **2026ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ஆம்** நாளன்று இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த இந்நீதிமன்றம், **பாரத நீதிச்சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 106(1) ஆகியவற்றின் கீழும், மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185**–ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்காக போதிய அடிப்படை முகாந்திரங்கள் இருப்பதாக முடிவு செய்து இந்த வழக்கை கடந்த **29.01.2026–ஆம்** தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அவர் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதன் பேரில், **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 230–ன்** கீழ் வழங்கப்பட வேண்டிய வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் அவருக்கு முறையாக வழங்கப்பட்டன.

**குற்றச்சாட்டின் வனைதல்**

2. கடந்த **11.03.2026–ஆம்** நாளன்று, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, **பாரத நீதிச்சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 106(1) ஆகியவற்றின்**

**கீழும், மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185** ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, படித்துக்காட்டி அவரிடம் படித்துக் காட்டி, விளக்கி கூறி, அவரிடம் வினவப்பட்டது. அதற்கு குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தாம் குற்றமற்றவர் என்றும், வழக்கினை எதிர்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக, இவ்விசாரணை இந்நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள்**

3. அரசுத் தரப்பு தனது வழக்கினை நிரூபிப்பதற்காக, அரசுத் தரப்பு சாட்சிகள் **அ.சா. 1 முதல் அ.சா. 7** வரை முன்னிறுத்தி விசாரணை செய்து, சான்றாவணங்கள் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14** வரை குறியீடு செய்துள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட நபர்த் தரப்பில் எந்தவொரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை, மற்றும் எந்தவொரு சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு வழக்கு விவரம்**

4. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விவரம்:**

   a. கடந்த 12.10.2025–ஆம் தேதி மாலை நேரத்தில் இவ்வழக்கில் இறந்துபோன செல்லதுரை என்பவர் அவரது மனைவி அ.சா.1 செல்வி செல்வியிடம் சொல்லிவிட்டு வெளியில் கிளம்பி சென்றுள்ளார். அவர் சென்று 2 மணி நேரம் கழித்து அசோக் என்பவர் போன் மூலமாக விபத்து பற்றி தெரிவித்துள்ளார். விபத்தின் காரணமாக தலையிலும், மூக்கிலும்

இரத்தம் வந்து மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்னதாகவே இறந்துள்ளார், இந்த சம்பவம் தொடர்பாக, மேற்படி காயமடைந்த செல்லதுரையின் மனைவி அ.சா.1 செல்வி செல்வி மேட்டூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மோகன் பெற்று அந்தப் புகார் அடிப்படையில் மேட்டூர் காவல் நிலைய குற்ற எண்.513/2025 என்ற எண்ணில் பாரத நீதிச் சட்டப் பிரிவுகள் 281, 106(1) மற்றும் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 185 ஆகியவற்றின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளார்.

b. இந்த சம்பவத்தில் உயிரிழந்த செல்லதுரை தொடர்பான வழக்கு, தொடர் புலன் விசாரணைக்காகக் காவல் ஆய்வாளர் அ.சா.6 அம்சவல்லி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கின் புலன் விசாரணைப் பொறுப்பை ஏற்ற காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும் சம்பவ இடச் சாட்சிகளைத் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

c. மேற்படி வழக்கின் புலன் விசாரணைப் பொறுப்பைப் பெற்ற காவல் ஆய்வாளர் அம்சவல்லி, கடந்த 05.11.2025–ஆம் தேதி 17.00 மணியளவில் இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான சந்தோஷ் என்பவரைக் கைது செய்து காவல் நிலையப் பிணையில் விடுவித்துள்ளார். இதனையடுத்து, இந்த சம்பவத்தில் விபத்தை ஏற்படுத்திய TN 93 D 1353 என்ற பதிவு எண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்யுமாறு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் அளித்துள்ளார்.

d. அதனையடுத்து, இந்த சம்பவத்தில் உயிரிழந்த செல்லதுரை என்பவரின் உடல் வைக்கப்பட்டிருந்த சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக, பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அ.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கையைத் தயார் செய்துள்ளார். மேலும் இவ்வழக்கில் உயிரிழந்த செல்லதுரை என்பவரின் இறப்பை பதிவு செய்த மேட்டூர் அரசு மருத்துவமனை மருத்துவர் பிரசாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி செல்லதுரை என்பவரின் உடலில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் அருண்நடேஷ் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் மேற்படி மருத்துவர்களிடமிருந்து அ.சா.ஆ.8 விபத்துப் பதிவேடு மற்றும் அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை அறிக்கை ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

e. மோட்டார் வாகன ஆய்வு மேற்கொண்ட ஆய்வாளரையும் விசாரணை செய்து அ.சா.ஆ.12 மோட்டார் வாகன ஆய்வறிக்கையைப் பெற்றுள்ளார். மேலும் பிரேத பரிசோதனை அலுவல் புரிந்த தலைமை காவலர் மற்றும் முதற்கட்டப் புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இறந்த செல்லதுரையின் உள்ளுறுப்புகளை சேலம் இரசாயன பரிசோதனை ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை அ.சா.ஆ.14 பெற்றுள்ளார்.

f. இறுதியாக, தனது புலன் விசாரணையை முடித்து இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான சந்தோஷ் என்பவர் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகியதால், அவருக்கு எதிராக பாரத நீதிச் சட்டப் பிரிவுகள் 281,

106(1) மற்றும் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 185 ஆகியவற்றின் கீழ் கடந்த 08.01.2026–ஆம் தேதி இறுதி அறிக்கை தயார் செய்து, இந்த நீதிமன்றத்தில் 22.01.2026–ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

5. **அரசுத் தரப்பு சாட்சியங்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் விளக்கம்:** அரசுத் தரப்பு சாட்சி விசாரணை அனைத்தும் நிறைவுற்றதைத் தொடர்ந்து, கடந்த 27.07.2026 அன்று, அரசுத் தரப்பு சாட்சிகளால் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்கு எதிராகக் முன்னிலைப்படுத்தப்பட்ட குற்றஞ்சாட்டுச் சூழ்நிலைகள் குறித்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்குத் தெளிவாக விளக்கி விவரித்து, படித்துக் காட்டி **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 351(1)(b)–ன்** கீழ் அவரிடம் வினவப்பட்டது. அதற்கு குற்றஞ்சாட்டப்பட்ட நபர், தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் முற்றிலும் மறுத்ததுடன், இவ்வழக்கில் தான் பொய்யாகச் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பதில் அளித்துள்ளார்.

6. **சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு:** இவ்வழக்கில் எதிரித்தரப்பில் எந்தவித வாய்மொழி அல்லது ஆவணச் சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அனைத்து சாட்சிகளையும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் கற்றறிந்த வழக்கறிஞர் விரிவாகக் குறுக்கு விசாரணை செய்துள்ளார். குறுக்கு விசாரணையில் வெளிப்பட்ட அம்சங்கள், அரசுத்தரப்பின் வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இந்த நீதிமன்றம் முழுமையாகப் பரிசீலித்தபோது, இவ்வழக்கில் கீழ்க்கண்ட தீர்வு காணத்தக்க வினாக்கள் எழுகின்றன. அவற்றிற்கான விடைகள்,

சாட்சியங்களின் அடிப்படையில் பின்வருமாறு பரிசீலனை செய்யப்பட்டு விடையளிக்கப்படுகிறது.

7. **எழுவினா எண். 1: கடந்த 12.10.2025 அன்று இரவு 11:45 மணியளவில், இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சந்தோஷ் என்பவர், இவ்வழக்கில் உயிரிழந்த செல்லதுரை என்பவரைத் தனது TN.93.D.1152 எனும் பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர வைத்துக்கொண்டு, அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிச்சென்று, மாட்டுக்கொட்டகைச் சுவற்றின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, அதன் விளைவால் ஏற்பட்ட காயங்களால் மேற்படி செல்லதுரை என்பவர் உயிரிழக்கக் காரணமாக இருந்து, பாரத நீதிச்சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 106(1) ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயலைச் செய்துள்ளார் என்பதை அரசுத்தரப்பு நிரூபணம் செய்துள்ளதா?**

a. இவ்வழக்கில் உயிரிழந்த செல்லதுரை என்பவரின் மனைவியான அ.சா.1 செல்வி என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 12.10.2021 அன்று மாலை நேரத்தில் தனது கணவர் வீட்டில் இருக்கும்போது வெளியே செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றார் எனவும், அதன் பின்னர் இரண்டு மணி நேரம் கழித்து அசோக் என்பவர் தனக்குத் தொலைபேசி அழைப்பு செய்து, தன் கணவருக்கு விபத்து ஏற்பட்டு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் தெரிவித்தார் எனவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும்,

அத்தகவல் அறிந்து மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது தனது கணவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதைத் தெரிந்துகொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், இந்த வழக்கு சம்பவம் யாருடைய கவனக்குறைவால், எவ்வாறு நிகழ்ந்தது என்பதை மேற்படி அ.சா.1 செல்வி என்பவர் நேரில் பார்க்கவில்லை.

b. இதேபோல், இவ்வழக்கில் உயிரிழந்த செல்லதுரை என்பவரின் தாயார் அ.சா.2 ராஜாமணி மற்றும் தந்தை அ.சா.3 உத்ரமூர்த்தி ஆகிய இருவரும், மேற்கண்டவாறு விபத்து பற்றிய தகவல் அறிந்து மருத்துவமனைக்குச் சென்று பார்த்ததாகவே சாட்சியம் அளித்துள்ளனர்.

c. மேலும், இச்சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாகப் பட்டியலிடப்பட்ட அ.சா.5 கோபாலன் என்பவர் இந்த நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும்போது, சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 10 மணியளவில் தானும் தனது மனைவியும் குழந்தையுடன் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடம் வழியாகச் சென்றபோது, இரண்டு நபர்கள் அடிபட்டுக் கிடந்ததைக் கண்டதாகவும், அவர்களில் ஒருவர் மயக்கமடைந்து தரையில் கிடந்ததாகவும், மற்றொருவர் உட்கார்ந்திருந்ததாகவும், உட்கார்ந்திருந்த நபருக்குத் தண்ணீர் கொடுத்ததாகவும், அந்த இடத்தில் ஒரு இருசக்கர வாகனம் இருந்ததாகவும், தாங்கள் அவ்விடத்திற்குச் சென்றபோது ஏற்கனவே பலர் அங்கு கூடியிருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே, மேற்படி அ.சா.5 கோபாலன் என்பவர் இவ்விபத்து எவ்வாறு நிகழ்ந்தது

என்பதை நேரடியாகப் பார்க்கவில்லை. மேலும், குறுக்கு விசாரணையின்போது, இச்சம்பவம் மாட்டுக்கொட்டகையில் மோதி நிகழ்ந்தது எனத் தன்னிடம் யாரும் தெரிவிக்கவில்லை எனவும், தான் சென்றபோது நடுரோட்டில்தான் சம்பவம் நிகழ்ந்திருந்தது என்பதை அறிந்துகொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி அ.சா.5 கோபாலன் என்பவரின் சாட்சியம் விபத்து நிகழ்ந்த இடம் தொடர்பாக முரண்பாட்டை ஏற்படுத்துவதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

d. இச்சூழலில், மேற்படி அ.சா.5 கோபாலன் என்பவரைத் தவிர, வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் காவல்துறை தரப்பில் வேறெந்தச் சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. விசாரிக்கப்பட்ட சாட்சியமும் இச்சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதும், அரசுத்தரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு சுவற்றில் மோதியே சம்பவம் நிகழ்ந்தது என்ற வகையில் மேற்படி சாட்சியம் அமையவில்லை என்பதும் இந்த நீதிமன்றத்தின் கருத்தாகும்.

e. மேலும், சம்பவம் இரவு 11 மணியளவில் ஒரு கிராமப்புறத்தில் நிகழ்ந்திருக்கும் நிலையில், இயல்பாகவே அச்சம்பவத்தைப் பொதுமக்கள் நேரில் பார்த்திருக்க வாய்ப்பு குறைவே என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

f. ஆகவே, இவ்விபத்து இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சந்தோஷ் என்பவரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் நிகழ்ந்தது

என்பதற்கு அரசுத்தரப்பில் போதிய சாட்சியங்களும் ஆவணங்களும் இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது. இதன் விளைவாக, குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிரான **பாரத நீதிச்சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 106(1)** ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பினால் நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

g. எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், எழுவினா எண்.1–க்கு அரசுத்தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடையளிக்கிறது.

8. **எழுவினா எண்.2: இவ்வழக்கில் சம்பவத்தின்போது இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சந்தோஷ் என்பவர் மதுபோதையில் சாலை விதிகளுக்கு முரணாக இருசக்கர வாகனத்தை இயக்கி, மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185–ன் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயலைச் செய்துள்ளார் என்பதை அரசுத்தரப்பு நிரூபணம் செய்துள்ளதா?**

a. இவ்வழக்கில் மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சந்தோஷ் சம்பவத்தின்போது மதுபோதையில் இருந்தார் என்பதை நேரில் கண்ட சாட்சிகள் எவரும் அரசுத்தரப்பில் இல்லை. மேலும், மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபர் உடனடியாகக் கைது செய்யப்பட்டபோதிலும், அவர் உண்மையிலேயே மதுபோதையின் ஆளுமையில் இருந்தாரா என்பது குறித்து எவ்வித மருத்துவப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக, இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரி அ.சா.6 அம்சவல்லி என்பவரிடம் கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்ட நபரும் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த

காரணத்தினால் அவரை மேற்படி மதுபோதைப் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை என இந்த நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையின்போது தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டபோது பதிவு செய்யப்பட்ட விபத்துப் பதிவேட்டிலும் காயச் சான்றிதழிலும் அவர் மதுபோதையில் இருந்தார் என்பதற்கான பதிவு எதுவும் இல்லை என்பதையும் மேற்படி புலன்விசாரணை அலுவலர் அ.சா.6 அம்சவல்லி ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தொடர்பான அ.சா.ஆ.10 விபத்துப் பதிவேட்டு அறிக்கையை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்தபோது, அதில் அவரது சுவாசத்தில் மதுவின் வாசனை இருந்தது என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

b. மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185–ன் படி, ஒரு மோட்டார் வாகனத்தை இயக்கும் நபர் 100 மில்லி இரத்தத்தில் 30 மில்லி கிராமுக்கு அதிகமாக ஆல்கஹால் கலந்திருந்தால் மட்டுமே தண்டிக்கப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் இரத்தத்தில் எவ்வளவு அளவு ஆல்கஹால் கலந்திருந்தது என்பது குறித்துப் புலனாய்வு நடத்தப்படாமலும், மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமலும், அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் சேகரிக்கப்படாத சூழ்நிலையில், சுவாசத்தில் மதுபான வாடை இருந்தது என்ற சான்றை மட்டுமே வைத்து மேற்படி சட்டப்பிரிவின் கீழ் ஒரு நபருக்குத் தண்டனை வழங்க இயலாது என

இந்த நீதிமன்றம் கருதுகிறது.

c. ஆகவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிரான மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185–ன் கீழான குற்றச்சாட்டையும் அரசுத்தரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

d. எனவே, மேற்படி காரணங்களின் அடிப்படையில் எழுவினா 2–க்கு அரசுத்தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடையளித்துள்ளது.

**முடிவு**

முடிவாக இந்த வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சந்தோஷ், த/பெ.பழனிவேலு என்பவர் **பாரத நீதிச்சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 106(1) ஆகியவற்றின் கீழும், மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185** ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து பாரத குடிமக்கள் பாதுகாப்புச் **சட்டம் பிரிவு 271(1)–ன்** கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்கு பிணையாளர்கள் வழங்கிய பிணைப் பத்திரத்தை ரத்து செய்து என்னை நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் ஜூலை மாதம் 29–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில்

அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN Date: 2026.07.29 18:35:38 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ. சா. 1 | செல்வி | புகார்தாரர் |
| அ. சா. 2 | ராஜாமணி | பிரேத விசாரணை சாட்சி |
| அ. சா. 3 | உத்தரமூர்த்தி | பிரேத விசாரணை சாட்சி |
| அ. சா. 4 | மோகன் | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| அ. சா. 5 | கோபாலன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ. சா. 6 | அம்சவள்ளி | புலனாய்வு அதிகாரி |
| அ. சா. 7 | லதா | கூடுதல் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.1 | புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் | அ.சா.1 |
| அ. சா. ஆ.2 | புகார் | அ.சா.4 |
| அ. சா. ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ. சா. ஆ.4 | பார்வை மகஜர் | அ.சா.6 |
| அ. சா. ஆ.5 | மாதிரி வரைப்படம் | அ.சா.6 |
| அ. சா. ஆ.6 | போலீஸ் இண்டிமேஷன் | அ.சா.6 |
| அ. சா. ஆ.7 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.8 | செல்லதுரை என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.6 |
| அ. சா. ஆ.9 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.10 | சந்தோஷ் என்பவரின் விபத்து பதிவேடு | அ.சா.6 |
| அ. சா. ஆ.11 | பிரீத்தம் மருத்துவமனையில் வழங்கப்பட்ட சந்தோஷ் என்பவரின் காயச் சான்றிதழ் | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.12 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.13 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.14 | இறப்பின் காரணம் குறித்தான தடயவியல் ஆய்வறிக்கை | அ.சா.7 |

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN
Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.29 18:35:25 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:–**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.